செ.வெ.எண்: 389/2016 நாள்: 21.06.2016

**பத்திரிக்கை செய்தி**

தேசிய நெடுஞ்சாலை எண்.47 காவல் கிணறு முதல் கேரள எல்லை வரை மற்றும் 47B விரிவாக்க பணிக்காக நில ஆர்ஜிதம் மேற்கொள்ளப்பட்டு நிலங்களுக்குரிய இழப்பீட்டுத் தொகை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இழப்பீட்டு தொகையினை பெற ஆரல்வாய்மொழி, தோவாளை, திருப்பதிசாரம், நாகர்கோவில், தேரூர், வடசேரி கிராமங்களை சார்ந்த நில உரிமையாளர்கள் வள்ளியூரில் செயல்படும் தனிவட்டாட்சியர் நிலமெடுப்பு தேசிய நெடுஞ்சாலை அலுவலகத்தை நில உரிமையினை நிரூபிக்கும் ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும், கொட்டாரம், தாமரைகுளம், இரவிபுதூர், குலசேகரபுரம், தேரூர், ஆளூர் வில்லுக்குறி, இரணியல், கல்குளம், ஆகிய கிராமத்தை சார்ந்த நில உரிமையாளர்கள் நில உரிமையினை நிரூபிக்கும் ஆவணங்களோடு நாகர்கோவில் வெட்டூர்ணிமடத்தில் இயங்கி வரும் தனிவட்டாட்சியர் நில மெடுப்பு தேசிய நெடுஞ்சாலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும், திருவிதாங்கோடு, கப்பியறை, வாள்வச்சகோஷ்டம், நட்டாலம், குமாரபுரம், மெதுக்கும்மல் மற்றும் குன்னத்தூர் ஆகிய கிராமத்தை சார்ந்த நில உரிமையாளர்கள் குழித்துறையில் இயங்கி வரும் தனிவட்டாட்சியர் நிலமெடுப்பு தேசிய நெடுஞ்சாலை அலுவலகத்தை நில உரிமையினை நிரூபிக்கும் ஆவணங்களோடு தொடர்பு கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இது நாள் வரையிலும் திருநெல்வேலி தியாகராஜர் நகரில் இயங்கி வந்த சிறப்பு மாவட்ட வருவாய் அலவலகம் நிலமெடுப்பு தேசிய நெடுஞ்சாலை தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த நில உரிமையாளர்களின் வசதிக்காக தற்போது நாகர்கோவிலுக்கு மாறுதல் செய்யப்பட்டு நாகர்கோவில் பொதுப்பணித்துறை விருந்தினர் மாளிகைக்கு எதிரே அப்சர்வேட்டரி தெருவில் செயல்பட்டு வருகிறது. மேலும் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்குரிய இழப்பீட்டுத் தொகை குறித்த விபரங்களை சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுலவகத்தை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/-சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல்/உத்தரவு படி/

மாவட்ட ஆட்சியருக்காக
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்)
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.